# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | சிவகங்கை | காலம் : | 15/03/2023 | முதல் | 19/03/2023 |
| அறிக்கை எண் : | 021/ 2023 | வெளியீட்டு நாள் : | 14/03/2023 | | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (09.03.2023 முதல் 13.03.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –19-03-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 09/03 | 10/03 | 11/03 | 12/03 | 13/03 | தேதி | நாள்-5 15/03 | நாள்-5 16/03 | நாள்-5 17/03 | நாள்-5 18/03 | நாள்-5 19/03 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 1 | 1 | 1 | 2 |
| 36 | 35 | 35 | 35 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 36 | 36 | 35 | 35 | 35 |
| 23 | 23 | 23 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 22 | 21 | 21 | 21 |
| 3 | 5 | 4 | 4 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 1 | 2 | 3 | 4 | 5 |
| 71 | 80 | 70 | 69 | 77 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 40 | 46 | 37 | 46 | 39 | | 30 | 30 | 30 | 40 | 40 |
| 7 | 8 | 11 | 13 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 8 | 6 | 6 | 6 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | தென் கிழக்கு | **காற்றின் திசை** | மேற்கு | மேற்கு | மேற்கு | **வட** மேற்கு | வடக்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மார்ச் 16, 17, 18 மற்றும் 19ம் தேதிகளில் மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 21°-22° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், மேற்கு, வடமேற்கு மற்றும் வடக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## இடி மின்னல் எச்சரிக்கை:

வரும் 17.03.2023 முதல் 19.03.2023 தேதி வரை தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. கால்நடைகளை பாதுகாப்பான இடங்களில் கட்டி வைக்கவும். *கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கோடை காலங்களில் ஏற்படும் தீவனப்பயிர்கள் பற்றாக்குறையினை தவிர்க்கும் வகையில் பாசன வசதியுள்ள விவசாயிகள்* 10 *சதவீத நிலத்தில்* கம்பு நேப்பியர் போன்ற தீவனப்பயிர்களை சாகுபடி செய்யலாம். *இடி மின்னலில் இருந்து தங்கள் கால்நடைகளை பாதுகாக்கும் பொருட்டு கழுத்தில் கட்டியுள்ள உலோக மணிகளை அகற்றிவிடவும்.*

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள்** : வாழை, கத்தரி, கால்நடை

வாழை:

- பூவன், ரஸ்தாளி, மொந்தன், கற்பூரவள்ளி மற்றும் நெய் பூவன் போன்ற வாழை இரகங்களில் நூற்புழு கட்டுப்படுத்த 5 கிராம் சூடோமோனஸ் புளூரசென்ஸ் 5 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி, 5 கிராம் பேசிலஸ் என்ற உயிரியல் இடுபொருட்களைப் பரவலாகத் தூவி, சிறிது நிழலில் உலர வைத்தபின் நடவு செய்ய வேண்டும்

.

கத்தரி:

- கத்தரி பயிரில் வெள்ளை ஈ கட்டுப்படுத்த மஞ்சள் நிற ஒட்டும்பொறி அட்டைகளை ஏக்கருக்கு 5 என்ற வீதத்தில் வைக்க வேண்டும்.
- மேலும் 1 லிட்டர் தண்ணீருடன் 3 மில்லி வேப்பெண்ணெய் கலந்து, அதனுடன் 1 மில்லி டீப்பால் என்ற ஒட்டும் திவரம் சேர்த்து தெளிக்க வேண்டும்.

கால்நடை:

- தற்போது நிலவும் வெப்பமான சூழ்நிலையிலிருந்து தங்களது கால்நடைகளை காப்பாற்ற பகல் நேரங்களில் அரை மணி நேரத்திற்கு ஒரு முறை அவற்றின் உடம்பில் தண்ணீரை பீய்ச்சி அடிக்கவும்.
- நிழற்ப்பாங்கானஇ இடத்தில் 24 மணி நேரமும் போதுமான அளவு குடி நீரினை குடிப்பதற்காக வைக்கவும்.
- தங்களது கால்நடைகளை அதிகாலை, மாலை மற்றும் இரவு நேரங்களில் உணவு எடுத்துக்கொள்ளப் பழக்கப்படுத்துங்கள்.
- அதிகாலை மற்றும் அந்திமாலை நேரங்களில் மட்டும் மேய்ச்சலுக்கு விடுவதன் மூலம் கடுமையான வெப்பத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்கலாம்.